2026 ஏப்ரல் மாதம் 10- ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 57/2020

2025-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10- ஆம் தேதி வெள்ளிக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW4 நபரின் வாக்கு மூலம்

(1969-ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 - கணேசன் |
| தந்தை பெயர்: | பகவதிராஜ் |
| ஊர்: | உத்தமபாளையம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | சிறப்பு சார்பு ஆய்வாளர், உத்தமபாளையம் காவல் நிலையம் |
| வயது : | 50 |

தேதி : 10.04.2026.

முதல் விசாரணை: -

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். விபத்து எந்த தேதியியல் நடைபெற்றது என்றால் 15.05.2020ம் தேதியாகும். விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்றால் பொன்ராம் என்பவர் புகார் கொடுத்தார், அவர் கொடுத்த புகாரின்பேரில் உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற எண்.943/2020 பிரிவுகள் 279, 304ஏ இ.த.ச.ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் TN 60 AW 1503 டிப்பர்

லாரியின் ஓட்டுநரான திருகுமரன் என்பவர் மீது உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, C.C.No.346/2020 நிலுவையில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் காவல் இறுதி அறிக்கை எங்கள் காவல்நிலையத்தில் குற்ற எண்.943/2020–ல் தாக்கல் செய்யப்பட்டதாகும், அது **ம.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை என்றால் சரிதான். அது **ம.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**:–

நான் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணம் ம.சா.ஆ.15 மற்றும் ம.சா.ஆ.16 பற்றிய முழு விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, காவல்நிலைய வழக்கு கோப்புகளிலிருந்து உண்மை நகல் என்று சான்று செய்து கொடுக்கப்பட்டது.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 10.04.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.10 18:05:57 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.

10.04.2026